**Revised**

**செய்தி வெளியீடு எண் : 207** **நாள் : 01.02.2023**

**செய்தி வெளியீடு**

**பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் தமிழ்நாடு முழுவதும் 784 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5351 புதிய பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிக்கான குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை தொடங்கி வைத்து, வேலூர் மாவட்டத்தின் 7 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 55 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ.15.96 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 114 வகுப்பறைக் கட்டடங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (1.2.2023) வேலூர் மாவட்டம், காட்பாடி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், **பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2400 கோடி ரூபாய் நிதியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் தமிழ்நாடு முழுவதும் 784 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5351 புதிய பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிக்கான குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை தொடங்கி வைத்து,** வேலூர் மாவட்டத்தில் வேலூர், காட்பாடி, குடியாத்தம், அணைக்கட்டு, கணியம்பாடி, பேர்ணாம்பட்டு, கீ.வ. குப்பம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 55 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 15 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 114 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டு மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, அவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்திட "இல்லம் தேடி கல்வி", "எண்ணும் எழுத்தும்", "நம் பள்ளி நம் பெருமை" போன்ற திட்டங்களை செயல்படுத்துதல், அரசுப் பள்ளிகளின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு "நம்ம ஸ்கூல் பவுண்டேசன்", காலையில் பள்ளிக்கு வரும் மாணவ, மாணவியர்கள் பசியின்றி கல்வி கற்க 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதுடன், ஊரகப் பகுதிகளில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான

உட்கட்டமைப்பு வசதிகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை வாயிலாக அமைத்து பராமரித்து வருகின்றது.

குழந்தைகள் சிறந்த முறையில் கற்பதற்கு ஏற்ற இணக்கமான சூழல் அவசியமாகும். இதனை கருத்தில் கொண்டு இவ்வரசு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம், நமக்கு நாமே திட்டம், ஊராட்சி ஒன்றிய பொது நிதி, கனிம நிதி, சமூக பொறுப்பு நிதி ஆகிய திட்டங்களின் கீழ் கடந்த இரண்டு நிதியாண்டுகளில் இதுவரை 466 பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு 90 கோடி ரூபாய், 2,834 கழிவறைகள், 1,729 சமையலறைக் கூடங்கள், 639 குடிநீர் பணிகள், 139 சுற்றுச்சுவர் பணிகள் ஆகியவற்றிற்கு மொத்தம் 263 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுதவிர, பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 127 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கற்றல் கற்பித்தலுக்கு உகந்த சூழலை வழங்குவதற்கும், மாணவர் வருகையை அதிகரிப்பதற்கும் மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதற்கும் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமான ஒன்றாகும். இதனை கருத்தில் கொண்டு, ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6000 புதிய வகுப்பறைகள் நடப்பாண்டில் கட்டப்படும் என்றும், பள்ளிகளின் பராமரிப்பு பணிகளுக்கென ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள 150 கோடி ரூபாய் நிதியுடன் சேர்த்து தற்போது 115 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.10.2022 அன்று சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் அறிவித்தார்.

இந்த அறிவிப்பின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் 2,72,857 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 36 மாவட்டங்களில் 2,381 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2,462 பள்ளிக் கட்டடங்கள் 5,351 குழந்தை நேய அம்சங்களுடன் கூடிய புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிக்கான குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ், வேலூர் மாவட்டத்தில், வேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் 2 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், குடியாத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் 1 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில் 4 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் 1 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், கீ.வ. குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் 85 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 3 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், என மொத்தம் 55 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 15 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி, மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், திரு. கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஏ.பி. நந்தகுமார், திரு. ப. கார்த்திகேயன், திருமதி வி. அமுலு விஜயன், துணை மேயர் திரு. சுனில்குமார், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு. தாரேஸ் அஹமது, இ.ஆ.ப., பள்ளிக் கல்வித்துறை ஆணையர் திரு.நந்தகுமார், இ.ஆ.ப., வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பெ. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மேலும், இந்நிகழ்ச்சியில் காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள், திண்டுக்கல், கடலூர், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, திருப்பூர், திருவாரூர், கரூர், மதுரை, கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.**

…………

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in